# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்
## விரிவாக்கக் கல்வி இயக்ககம், சென்னை
## ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் - 637 002

இதழ் 2 | **செய்தி மடல்** | எண் : 3

**ஜீலை - செப்டம்பர் 2017**



**முதன்மை ஆசிரியர்**

முனைவர் **நி.கு. சுதீப்குமார்**
இயக்குநர்,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்

**ஆசிரியர்**

முனைவர் **ந. அகிலா**
முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்

**இணை ஆசிரியர்**

முனைவர் **சு. சத்யா**
விஞ்ஞானி / உதவிப் பேராசிரியர்
மண்ணியல் மற்றும்
வேளாண் வேதியியல்

**ஆசிரியர் குழு**

முனைவர் **சி. ஷர்மிளா பாரதி**
முனைவர் **பெ. முருகன்**
திரு. **சி. சங்கர்**
மருத்துவர் **ம. ஜோதிலெட்சுமி**
முனைவர் **சி. பால்பாண்டி**
திருமதி. **மா. டெய்சி**




நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகள், இளைஞர்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வெளிவரும் புதிய தொழில்நுட்பங்களை வயல் வெளிச் சோதனை, முதல்நிலை செயல்விளக்கம், விழிப்புணர்வு முகாம் மற்றும் அறிவுரைகள் வழங்குதல் மூலம் கொண்டு சேர்ப்பத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாயிகள், பண்ணை மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, மாடித்தோட்டம் அமைத்தல், ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை, கால்நடை பராமரிப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, பசுந்தீவனம் உற்பத்தி செய்தல், ஒருங்கிணைந்த முறையில் மீன் வளர்ப்பு ஆகிய தொழில்நுட்பங்கள் அடங்கிய பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த மூன்று மாதங்களில் மழைப்பொழிவு நன்றாக இருந்ததால் கிடைக்கக்கூடிய மழையை கொண்டு விவசாயிகள் தகுந்த காலத்தில் மானாவாரி பயிர் செய்யவும் மற்றும் இக்காலத்தில் தோன்றக்கூடிய நோய் மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்தவும் வேளாண்மை அறிவியல் நிலையம் அதிக அக்கறை செலுத்தியது. ஜீலை 2017 முதல் செப்டம்பர் 2017 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் செய்த முக்கிய பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### புதிய இந்தியா உருவாக்கம் - சபதம் மூலம் சாதிப்போம் குறித்த ஒரு நாள் விழிப்புணர்வு முகாம்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்கக்கூடிய வேளாண் மற்றும் இதர துறைகளிலுள்ள புதிய தொழில்நுட்பங்களை கொண்டு புதிய இந்தியா உருவாக்கம் - சபதம் மூலம் சாதிப்போம் என்ற தலைப்பில் ஒரு நாள் விழிப்புணர்வு முகாமினை 29.08.2016 அன்று நாமக்கல் மாவட்டத்தில் துறையூர் சாலையில் அமைந்துள்ள பாவலர் ம. முத்துசாமி நகராட்சி மண்டபத்தில் நடத்தியது. புதிய தொழில்நுட்பங்கள் அடங்கிய கண்காட்சியும் விழாவில் அமைக்கப்பட்டது. அக்கண்காட்சியில் ஒருங்கிணைந்த பண்ணையம், தீவன விதைகள், காய்கறி விதைகள், இயற்கை முறையில் சாகுபடி செய்த காய்கறிகள், வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள விவசாயிகளுக்கான புதிய திட்டங்கள், வேளாண்மை சார்ந்த இயந்திரங்கள், வாழை மற்றும் சிறுதானியங்களில் மதிப்புக்கூட்டியப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது. நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் அவர்கள் கலந்து கொண்டு கண்காட்சியை துவக்கி வைத்து விழா பேருரை ஆற்றினார்கள். மேலும் விவசாயிகளிடம் விழா பேருரையின் போது வருமானத்தை இருமடங்காக்கவும் மற்றும் மண்வளத்தை மேம்படுத்தவும் புதிய

தொழில் நுட்பங்களை கடைபிடிக்குமாறு கேட்டுக்கொண்டார். அத்துடன் சபதம் மூலம் சாதிப்போம் உறுதி மொழியை விவசாயிகள் எடுக்க முன்மொழிந்தார். விழாவில் விவசாயிகள் ஒருங்கிணைந்த பண்ணையத்தை கடைப்பிடிக்க தேவையான இடுப்பொருட்களான குறைந்த வயதுடைய வறட்சியை தாங்கக்கூடிய விதைகள், நாட்டுக்கோழி மற்றும் மீன் குஞ்சுகளையும் வழங்கினார். மண்வள அட்டையும் வழங்கப்பட்டது.

புதிய தொழில்நுட்பங்கள் அடங்கிய கையேடு வெளியிட்டு அதை மற்ற சிறப்பு விருந்தினர்களுக்கும் வழங்கினார். இவ்விழாவில் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந. அகிலா அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இவ்விழாவில் வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு. பெ. கந்தசாமி மற்றும் முன்னாள் நகர்மன்றத் தலைவர் திரு. ஆர். கரிகாலன் ஆகியோர்கள் கலந்துகொண்டு விழாவில் தலைமையுரை ஆற்றினார்கள். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரின் விஞ்ஞானிகளான உழவியல்துறைப் பேராசிரியர் முனைவர் எம். முகம்மது அமானுல்லா அவர்கள் ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பிலும், உயிர் எரிசக்தி துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எல். புகழேந்தி அவர்கள் சாண எரிவாயு தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பிலும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னையின் கீழ் இயங்கும் ஓசூரில் உள்ள கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை மையத்தின் வேளாண்மை பொறியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் வி. பேராசிரியன் அவர்கள் நுண்நீர் பாசன முறைகள் என்ற தலைப்பிலும் இவ்விழாவில் கலந்துகொண்டு தொழில் நுட்ப உரை ஆற்றினார்கள். இவ்விழாவானது முனைவர் பெ. முருகன் நன்றியுரை வழங்கி தேசியகீதம் ஒலிக்கப்பெற்று நிறைவடைந்தது.

**கறவைமாடுகளில் இனப்பெருக்க திறனை அதிகரிப்பதற்கான தீவன மேலாண்மை குறித்த ஒருநாள் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகைமையின் கீழ் கறவைமாடுகளில் இனப்பெருக்க திறனை அதிகரிப்பதற்கான ஒருநாள் கருத்தரங்கு மற்றும் கண்காட்சினை 06.07.2017 அன்று நாமக்கல் மாவட்டத்தில் துறையூர் சாலையில் அமைந்துள்ள பாவலர் ம. முத்துசாமி நகராட்சி மண்டபத்தில் நடத்தியது. அதில் கறவைமாடு வைத்திருக்கும் விவசாயிகள் 500 பேர் கலந்து கொண்டனர். தீவன விதைகள், கரணைகள், ஹைட்ரோபோனிக்ஸ் முறையில் பசுந்தீவனம் வளர்த்தல், கால்நடைகளுக்குகேற்ற பல்வேறு வகையான தீவனங்கள், அசோலா, சைலேஜ் பை, தாது உப்புக்கலவை, கால்நடை வளர்ப்பில் பயன்படுத்தப்படும் முக்கிய உபகரணங்கள் ஆகியவை அடங்கிய கண்காட்சியை வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் தனியார் துறைகள் அமைந்திருந்தது. இவ்விழாவில் முக்கிய தொழில்நுட்ப உரையாக இலாபகரமான கறவை மாடு வளர்ப்பு பற்றி வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந. அகிலா அவர்களும், தரமான பசுந்தீவனம் தயாரித்தல் பற்றி உழவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பெ. முருகன் அவர்களும் மற்றும் விவசாய நிலங்களில் கிடைக்கூடிய பயிர்க்கழிவுகளை கால்நடை தீவனமாக மாற்றுதல் மற்றும் சேமித்தல் பற்றி கால்நடை அறிவியல் துறை உதவிப்பேராசிரியர் மருத்துவர் ம. ஜோதிலெட்சுமி அவர்களுக்கும் வழங்கினார்கள். மேலும் இவ்விழாவில் அறிவியல் சார்ந்த கால்நடை பராமரிப்பு பற்றிய படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது. இத்துடன் பராமரிப்பு குறிப்புகள் அடங்கிய கையேடும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் தீவனம் நறுக்கும் கருவிகளைக் கொண்டு தீவனம் நறுக்குதல் மற்றும் புல் வெட்டுதல் ஆகிய செயல் விளக்கமும் விவசாயிகளுக்கு காண்பிக்கப்பட்டது.



**வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு சிறப்பு விருந்தினர்களின் வருகை**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு தமிழக அரசின் ஆற்றல் துறை முதன்மைச் செயலர் திரு. ஆர். விக்ரம் கபூர், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. எம். ஆசியா மரியம் அவர்கள் மற்றும் வேளாண்மை, கால்நடை பராமரிப்பு துறையை சார்ந்த ஏணைய அரசு அதிகாரிகளும் 20.07.2017

அன்று விவசாயத்தில் வறட்சி நிவாரண உத்திகளை கையாளும் முறைகளை பற்றி அறிந்துகொள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தை பார்வையிட்டனர். அப்பொழுது வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந. அகிலா அவர்கள் நாமக்கல் மாவட்ட விவசாயிகள் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருந்த போது அதை சரிகட்ட மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்பங்களான வறட்சியை தாங்கி வளரக்கூடிய பயிர் வகைகள், விதையை கடினப்படுத்தி விதைத்தல், நீண்டகால தோட்டக்கலை மரங்களை காப்பாற்றக் கூடிய பாசன முறைகள், ஹைட்ரோபோனிக்ஸ் முறையில் தீவனம் தயாரித்தல், அசோலாவை கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்துதல், இலைவழித் தெளிப்பாக மீத்தைலோபாக்டீரியம், பொட்டாசியம் கரைசல் தெளித்தல் ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைத்தார். அதனுடன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மாதிரி திடல்கள் மற்றும் அதன் பயன்களை பற்றியும் எடுத்துரைத்தார்.

**உலக தேனீ வளர்ப்பு தினம்**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் உலக தேனீ வளர்ப்பு தினத்தை 19.08.2017 அன்று அறிவியல் நிலைய வளாகத்தில் கொண்டாடியது. தேனீ வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு தேனீக்கள் மற்றும் தேனீ வளர்ப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டது. 50 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**கிராம தத்தெடுப்புத் திட்டத்தின் கீழ் சத்துமிகு காய்கறித் தோட்டம் அமைத்தல்**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தத்து கிராமமான அணியாபுரத்தில் அமைந்துள்ள என்.எஸ். ஆறுமுக உடையார் மேல்நிலைப் பள்ளியில் 10.08.2017 அன்று சத்துமிகு காய்கறித் தோட்டம் அமைத்தது. அப்பள்ளியை சேர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும் சத்துமிகு காய்கறி தோட்டம் அமைத்ததில் கலந்து கொண்டு பார்வையிட்டனர். அவர்கள் தற்பொழுது வேளாண்மை அறிவியல் நிலையத்திலுள்ள விஞ்ஞானிகளினால் அளிக்கப்பட்ட பயிற்சியின் மூலம் தங்களை தயார் செய்துக் கொண்டு காய்கறித் தோட்டத்தை கவனித்து வருகின்றனர்.

**தூய்மை இந்தியா இயக்கம் - விழிப்புணர்வு நிகழ்ச்சி**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் தூய்மை இந்தியா இயக்கம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியினை கடந்த 15.09.2017 முதல் 02.10.2017 வரை பல்வேறு பகுதிகளில் நடத்தியது. வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர், விஞ்ஞானிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு வேளாண்மை அறிவியல் நிலைய வளாகம், பொது இடங்கள் (குறிப்பாக கோவில், பொதுக் கழிப்பிடம், பள்ளிகள்) மற்றும் சுற்றுலாத்தலங்களிலுள்ள குப்பைகளை அகற்றுதல், களை எடுத்தல், மரம் நடுதல், கழிப்பிடத்தை சுத்தம் செய்தல், ஏரிகளை தூர்வார்தல் மற்றும் கூட்டுதல் ஆகிய பணிகளை செய்தனர். நாமக்கல் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் கட்டுரை போட்டிகள், ஓவியப் போட்டிகளும் நடத்தப்பட்டன. சிறந்த கட்டுரைகள் மற்றும் ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசளிக்கப்பட்டது. சிறந்த வேளாண்மை அறிவியல் நிலைய பணியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசளிக்கப்பட்டனர்.



**உள்ளிடப்பயிற்கள்**



கடந்த ஜீலை 2017 முதல் செப்டம்பர் 2017 வரை 18 உள்ளிடப் பயிற்சிகள் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தப்பட்டது. அதில் சிறுதானியங்கள் சாகுபடி முறைகள், பருவமற்ற காலங்களில் காய்கறி சாகுபடி செய்யும் முறைகள், வேளாண் மற்றும் பழப்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, உயிர்பாதுகாப்பு காரணிகளின் பயன்கள் மற்றும் தயாரிப்பு முறைகள், ஒருங்கிணைந்த பூச்சி

மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை, விதை உரக்கட்டு தொழில்நுட்பம், தீவனப்பயிர்கள் தயாரிப்பு முறைகள், நாட்டுக்கோழி, ஆடு வளர்ப்பு, கால்நடைகளில் தீவன மேலாண்மை, ஒருங்கிணைந்த முறையில் மீன் வளர்ப்பு, கனநீர் மூலம் சினைப்பிடிப்பு தன்மையை அதிகரித்தல் ஆகிய தலைப்புகளில் உள்ளிடப்பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் 425 விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை துறையுடன் இணைந்து நடத்தப்பட்ட பயிற்சிகள்**



வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறையுடன் சேர்ந்து 2 பயிற்சிகள் நடத்தியது. அதில் 64 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இயற்கை முறையில் மாடித் தோட்டம் அமைத்தல், தானியப்பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை ஆகிய தலைப்புகளில் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் விவசாயிகளின் நிலத்தில் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

**வெளியிடப்பயிற்சிகள்**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகளின் தேவைக்கேற்ப விவசாய நிலங்களில் 26 வெளியிடப் பயிற்சிகளை நடத்தியது. மொத்தம் 754 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர். வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறையில் உள்ள முக்கிய பருவநிலைக்கேற்ற தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது.

**மண்டல மாதந்திர பணிமனைக் கூட்டம்**

கடந்த மூன்று மாதங்களில் 3 மண்டல மாதந்திர பணிமனைக் கூட்டம் வேளாண்மை அறிவியல் நிலையம் நாமக்களில் வேளாண்மை துறையை சார்ந்த வல்லுநர்களுக்கு நடத்தியது. அதில் 100 வேளாண் துறையை சார்ந்த களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர். வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் பருவநிலைக்கேற்ற சாகுபடி குறிப்புகள்



பற்றிய தொழில்நுட்ப உரை வழங்கினார்-கள். இக்கூட்டத்தில் பல்வேறு வட்டாரங்களில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் அதற்கேற்ற தீர்வுகளும் விவாதம் செய்யப்பட்டது.

**கண்காட்சி அமைத்தல் / கலந்து கொள்ளுதல்**



வேளாண்மை அறிவியல் நிலையம் 2 கண்காட்சியில் அரங்கம் அமைத்து பங்கு பெற்றது. அவற்றில் ஒன்று அவிநாசி சாலையில் அமைந்துள்ள கொடிசியா வளாகத்தில் 14.07.2017 முதல் 17.07.2017 வரை நடத்தப்பெற்ற வேளாண் கண்காட்சி - 2017ம் மற்றொன்று மல்லசமுத்திரத்தில் அமைந்துள்ள மகேந்திரா பொறியியல் கல்லூரி வளாகத்தில் 30.06.2017 முதல் 01.07.2017 வரை நடைபெற்ற உழவர் விழா 2017 ஆகும். தீவன விதைகள், கரணைகள், காய்கறி விதைகள், தாது உப்புக் கலவை, உயிர் காரணிகள், உயிர் உரங்கள், புத்தகங்கள், குறுந்தகடுகள் ஆகியன கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது.

வேளாண்மை அறிவியல் நிலையம் கால்நடைகளின் சினைப்பிடிப்புத் திறனை அதிகரிப்பதற்கான தீவன மேலாண்மை என்ற தலைப்பில் 06.07.2017 அன்று நடத்தப்பெற்ற விழிப்புணர்வு முகாமிலும் மற்றும் புதிய இந்தியா உருவாக்கம் என்ற தலைப்பில் 29.08.2017 அன்று நடத்தப்பெற்ற விழிப்புணர்வு முகாமிலும் கண்காட்சி அமைத்திருந்தது. மொத்தமாக 2068 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**மண் மற்றும் நீர் பரிசோதனை மற்றும் மண்வள அட்டை வழங்குதல்**



175 மண் மற்றும் 58 நீர் மாதிரிகளை விவசாயிகளிடமிருந்து பெற்று பரிசோதனை செய்து மொத்தமாக 182 மண் வள அட்டைகளும் மற்றும் 58 நீர் வள அட்டைகளையும் விவசாயிகளுக்கு நாமக்கல் வேளாண்மை அறிவியல்

நிலையம் கடந்த மூன்று மாதங்களில் வழங்கியது. மண் பரிசோனையின் அடிப்படையில் மண்வளத்தை மேம்படுத்தும் பொருட்டு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறையை கடைபிடிக்க விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

### விவசாயிகளை கௌரவித்தல்

திரு. கே.கே. வேலுசாமி த/பெ. திரு. எஸ். கந்தசாமி அவர்கள் மகேந்திர பொறியியல் கல்லூரியில் 30.06.2017 முதல் 01.07.2017 வரை நடைபெற்ற உழவர் விழாவில் (2017) சிறந்த விவசாயிக்கான விருதினை ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தை கடைப்பிடித்தற்காக பெற்றார்.



### கண்டுநர் சுற்றுலா - பட்டறிவு பயணம்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு கடந்த ஜீலை 2017 முதல் செப்டம்பர் 2017 வரை 695 விவசாயிகள் நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு வட்டாரங்களிலிருந்தும் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்தும் வருகை புரிந்தனர். வேளாண்மை அறிவியல் நிலையம் பற்றிய உரைகளும், தொழில்நுட்ப மாதிரி திடல்களை பற்றிய உரைகளும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

### தேசிய அளவிலான பருவநிலை மாற்றத்திற்கேற்ற வேளாண்மை முனைப்புத் திட்டம்

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி குழுமத்தின் நிதியுதவியுடன் தேசிய அளவிலான பருவநிலை மாற்றத்திற்கேற்ற வேளாண்மை முனைப்புத் திட்டம் 2010-ஆம் ஆண்டு முதல் வடவத்தூர் மற்றும் ஜம்புமடை கிராமத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மண்ணில் ஈரப்பதத்தை சேமித்து வைக்கும் பொருட்டு





இந்த 2017-18 ஆம் ஆண்டில் நிலக்கடலை, பாசிப்பயிறு மற்றும் உளுந்தில் பகுதி பாத்தி அமைத்தல் முறை 40 ஏக்கரில் செயல்விளக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்துடன் சின்னவெங்காயம் இரகம் கோ-5 கொண்டு சமுதாய நாற்றங்கால் அமைத்தல் பற்றிய செயல்விளக்கமும் 88 ஏக்கரில் செய்யப்பட்டது. இம்முறையினால் ஏக்கருக்கு ரூபாய் 20,000/- சாகுபடிக்கான செலவினம் குறைக்கப்பட்டுள்ளது. மண்வளத்தை மேம்படுத்தவும் பசுந்தாள் உரமிடுதலை ஊக்குவிக்கவும் பயறு வகைப் பயிர்கள் (பாசிப்பயறு, உளுந்து, நரிப்பயறு, கொள்ளு மற்றும் தட்டப்பயறு) கொண்டு பசுந்தாள் உரமிட்டு அவ்வயலில் மடக்கி உழுதல் பற்றிய செயல்விளக்கமும் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 100 விவசாயிகளைக் கொண்டு செய்யப்பட்டது. மேலும் கால்நடை சம்பந்தமான தொழில்நுட்பத்தில் வெப்பத்தினால் கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுக்கவும் மற்றும் இனப்பெருக்க திறனை அதிகரிக்கவும் 10 கோழிக் கொட்டகையும், 5 வெள்ளாடுகளுக்கான பரண் மேல் ஆடு வளர்ப்பு கொட்டகையும் மற்றும் 5 மேம்படுத்தப்பட்ட செம்மறி ஆடு கொட்டகையும் கால்நடைகளுக்காக அமைக்கப்பட்டது.

### தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் 2017 - 18



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்குழுமம் நிதியுதவியுடன் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உயர் விளைச்சல் தரும் பாசிப்பயிறு மற்றும் உளுந்து இரகங்களைக் கொண்டு தொகுப்புநிலை முதல்நிலை செயல்விளக்கம் மாணிக்கநத்தம், ஆர்.புதுப்பட்டி, நொச்சிப்பட்டி, மானுவகாட்டுப்பாளையம் மற்றும் கோகலை ஆகிய கிராமங்களில் மேற்கொண்டு வருகின்றது.

| வ. எண். | பயிர் | இரகம் | பரப்பளவு (எக்டர்) | விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | பாசிப்பயறு காரிப் | கோ-8 | 10 | 25 |
| 2. | பாசிப்பயறு ரபி | கோ-8 | 10 | 25 |
| 3. | உளுந்து காரிப் | வம்பன் 6 | 20 | 50 |

**வெற்றிக்கதை**

| | | |
|---|---|---|
| 1. | விவசாயின் பெயர் மற்றும் முகவரி |  திரு. **சி. சௌந்தரராஜன்** த/பெ. **பி. சின்னுசாமி**<br>136-A, வடவத்தூர் கிராமம்,<br>சேந்தமங்கலம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.<br>அலைபேசி எண் : 9976117822 |
| 2. | பண்ணை விபரம் | வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த 2010-ம் ஆண்டு முதல் வடவத்தூர் கிராமத்தை தேசிய அளவிலான பருநிலைமாற்றத்திற்கேற்ற வேளாண்மை முனைப்புத்திட்டத்திற்காக தேர்ந்தெடுத்ததிலிருந்து ஒருங்கிணைந்த பண்ணையத்தில் பருவநிலை மாற்றத்திற்கேற்ற தொழில்நுட்பங்களை கடைபிடித்து வருகிறார். |
| 3. | ஆண்டு வருமானம் | ஆண்டு நிகர வருமானம் ரூபாய் 2,50,000/- |
| 4. | கடைபிடித்து வரும் புதிய தொழில்நுட்பங்கள் | ❖ மழைநீர் சேமிப்பிற்காக 2-3 தடவை உழுதல்.<br>❖ தற்காலிக பண்ணை குட்டை அமைத்து மழை நீரை சேமித்தல்.<br>❖ வறட்சியை தாங்கி வளரக்கூடிய நிலக்கடலை இரகம் கோ-6 ஐ பயன்படுத்துதல்.<br>❖ குறைந்த பொருளாதார உதவியுடன் கூடிய கோழிக்கொட்டகையை கொண்டு கோழிகளை வெப்பத்திலிருந்தும் மற்றும் மற்ற விலங்கிணங்களிடம் இருந்து பாதுகாத்தல்.<br>❖ எளிதில் கிடைக்கக்கூடிய பொருட்களை வைத்து வெள்ளாடு கொட்டகை அமைத்தல்.<br>❖ கலப்பு தீவனம் வளர்த்தல்.<br>❖ தீவனம் சேமித்து வைத்தல். |
| 5. | செய்முறையில் உள்ள தொழில்நுட்பங்கள் | ❖ மழைநீரை சேமிக்க தற்காலிக பண்ணை குட்டை அமைத்தல்.<br>❖ வறட்சியை தாங்கி வளரக்கூடிய இரகங்களை பயன்படுத்துதல்.<br>❖ குறைந்த செலவினம் கொண்டு கோழிக்கொட்டகை அமைத்தல்.<br>❖ பரண்மேல் வெள்ளாடு வளர்த்தல்.<br>❖ தீவன மேலாண்மை செய்தல்.<br>❖ தொடர் குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசி போடுதல்.<br>❖ சின்ன வெங்காயத்தை எளிதில் கிடைக்கும் தென்னை மட்டைகளை கொண்டு சேமித்தல். |
| 6. | நோய் மேலாண்மைக்காக கடைபிடிக்கும் தொழில்நுட்பங்கள் | சொந்த முயற்சியின் அடிப்படையில் பண்ணையில் பருவநிலை மாற்றத்திற்கேற்ற தொழில்நுட்பங்களை கடைபிடித்து வருவதோடு தரமான நோய் மேலாண்மையும் உயிரியல் முறையில் செய்து வருகிறார். |
| 7. | வேலைவாய்ப்பு அளித்தல் | பண்ணையில் 3 வேலையாட்கள் தொடந்து வருடம் முழுவதும் வேலை செய்தல் ( 2 குடும்ப நபர்கள், 1 வேலையாள்) |
| 8. | மற்ற நிறுவனங்களுடான தொடர்பு | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் விவசாயத்துறை |
| 9. | பொருளாதார நிலை | வருடத்திற்கு நிகர இலாபமாக ரூ. 2,50,000 பெருகிறார். |


**மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்
ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம்
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலைய வளாகம்
நாமக்கல் - 637 002


ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல்.

பெறுநர்

திரு./ திருமதி. ____________________

____________________

அனுப்புநர் ____________________

முதுநிலை விஞ்ஞானி, பேராசிரியர் மற்றும் தலைவர்
ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம்
நாமக்கல் - 637 002